பொருளடக்கம்

குகைவாசிகள் கொள்கைப் பாதை 7

குகைவாசிகள் பதிப்பகப் பாதை 14

இப்னு பாஸ் ﵀ வாழ்க்கைக் குறிப்பு 21

தொடக்கம் 25

1 பிறந்த நாள் கொண்டாட்டம் குறித்த தீர்ப்பு 29

1. நேர்வழியின் முன்மாதிரிகள் இவ்வழியில் செல்லவில்லை 29

2. நூதனக் கிரியைகள் வழிகேடானவை 30

3. முழுமை பெற்ற மார்க்கத்தில் குறை ஒன்றுமில்லை 32

4. நற்செயல் எனில் நபியின் வழிகாட்டல் இருந்திருக்கும் 33

5. ஆதாரங்களுக்குக் கட்டுப்படுவதே கருத்து வேறுபாட்டை நீக்கும் 34

6. மக்கள் உருவாக்குபவை மார்க்கம் ஆகிவிடாது 35

7. பெரும்பான்மை ஆதாரமல்ல 36

8. மார்க்கம் விதித்த வரம்பை மீறாதீர்கள் 37

9. தொழுகையைச் சீர்செய்யாமல் எதைச் செய்து என்ன பயன்? 37

2 நபியவர்கள் ஆஜராகிறார்களா? 39

1. ஸலவாத்துச் சொல்லுங்கள் 40

2. நபியவர்கள்மீது அன்புகாட்ட பிறந்தநாள் கொண்டாட்டம் வழியல்ல 41

3 மிஅராஜ் பெயரிலான சடங்குகள் 47

4 பராஅத் பெயரிலான சடங்குகள் 52

5 கனவின் பெயரில் ஈமானைப் பறிக்கும் குழப்பங்கள் 64

6 நபி ﷺ அவர்களிடம் உதவிக்கரம் வேண்டுதல் 77

7 அல்லாஹ் அல்லாதவற்றைக் கொண்டு உதவி தேடுதல் 85
8 நபி ﷺ அவர்களைக் கொண்டு சத்தியம் செய்தல் 99
9 ஸிஃபியாக்களும் தர்காக்களும் 103

1

பிறந்த நாள் கொண்டாட்டம் குறித்த தீர்ப்பு

அல்லாஹ்வின் உதவியுடன் நான் கூறுவது என்னவென்றால், ரஸூல் ﷺ அவர்களுடைய அல்லது மற்ற எவருடைய பிறந்த தினத்தைக் கொண்டாடுவதாக இருந்தாலும் மார்க்கத்தில் அதற்கு அனுமதி இல்லை. அது மார்க்கத்தின் பெயரால் கொண்டு வரப் பட்ட ஒரு பித்அத் (நூதன செயல்) என்பதால் நிறுத்தப்படுவது அவசியமாகும்.

1. நேர்வழியின் முன்மாதிரிகள் இவ்வழியில் செல்லவில்லை

ரஸூல் ﷺ அவர்கள் அதைக் கொண்டாடவில்லை. தனக்காகவோ தனக்கு முன் வாழ்ந்து சென்ற நபிமார்களுக்காகவோ தனது மகள்கள், மனைவிகள் மற்ற உறவினர்களுக்காகவோ பிறந்தநாள் கொண்டாட்டங்கள் நடத்த வேண்டும் என்று கூறவில்லை. அத்து டன் நேர்வழி நடந்த கலீஃபாக்கள், நபித்தோழர்கள் மற்றும் அவர்களைப் பின்தொடர்ந்தவர்களான தாபியூன், தபஉ தாபிஈன் ஆகிய எவருமே பிறந்த தினங்களைக் கொண்டாடவில்லை. முந்திய நூற்றாண்டுகளில் வாழ்ந்த இஸ்லாமிய அறிஞர்களும் இதைக் கொண்டாடவில்லை. அவர்கள் அனைவரும் ரஸூல் ﷺ அவர்கள் காட்டிச் சென்ற முன்மாதிரியை, ஸுன்னாவை நன்கு அறிந்தவர்கள்; ரஸூல் ﷺ அவர்கள்மீது அளவில்லா அன்பு கொண்டவர்கள்; அவர்களது ஷரீஅத்தைப் பின்னால் (இக்காலத்தில்) வந்தவர்களைவிட மிகச் சரியாகப் பின்பற்றியவர்கள். எனவே, பிறந்த நாள் கொண்டாட்டம் ஏற்றமானது எனக் கண்டிருந்தால் அதை அவர்கள் நிச்சயமாகச் செய்திருப்பார்கள்.

நாம் ரஸூல் ﷺ அவர்களுடைய ஸுன்னாவை (வழிமுறையை) ப் பின்பற்றுவதன் மூலம் பித்அத் (நூதனக் கிரியை)களைத் தவிர்த்துகொள்ளும்படிக் கட்டளையிடப்பட்டுள்ளோம். இந்தக் கட்டளையானது இஸ்லாம் பூரணப்படுத்தப்பட்டுள்ளது என்ற

2

நபியவர்கள் ஆஜராகிறார்களா?

இங்கு குறிப்பிடவேண்டிய மிகவும் அதிசயமும் ஆச்சரியமுமான மற்றொரு விசயம் என்னவெனில், சிலர் மீலாது விழாக்களின்போது ரஸூல் ﷺ அவர்களும் அங்கு ஆஜராகி இருப்பார்கள் என நம்புவதே. இதன் காரணமாக அவர்கள் எழுந்து நின்று ரஸூல் ﷺ அவர்களை வரவேற்று வாழ்த்துகின்றார்களாம். இது அப்பட்டமான பொய் மாத்திரமல்ல, மிக மோசமான அறிவீனமும்கூட. ரஸூல் ﷺ அவர்கள் மீண்டும் எழுப்பப்படும் மறுமைநாளிற்கு முன் அவர்களது அடக்கத்தலத்திலிருந்து எழுந்து வரமாட்டார்கள் என்பது மட்டுமல்ல, அவர்கள் மக்களைச் சந்திக்கவோ அவர்களது கூட்டங்களில் கலந்து கொள்ளவோமாட்டார்கள். மாறாக, அவர்கள் மீண்டும் எழுப்பப்படக்கூடிய மறுமைநாள் வரை தமது அடக்கத்தலத்திலேயே இருப்பார்கள். அதேவேளை அவர்களது தூய ஆன்மா உயர்விலும் உயர்ந்த கண்ணியமான அந்தஸ்தில் அல்லாஹ்வுடன் இருக்கும். அல்லாஹுத் தஅலா கூறுகின்றான்:

ثُمَّ إِنَّكُمْ بَعْدَ ذَٰلِكَ لَمَيِّتُونَ ثُمَّ إِنَّكُمْ يَوْمَ الْقِيَامَةِ تُبْعَثُونَ

பிறகு நிச்சயமாக நீங்கள் மரணிப்பவர்களாக இருக்கின்றீர்கள். பிறகு மறுமைநாள் அன்று நிச்சயமாக நீங்கள் எழுப்பப்படுவீர்கள். *(குர்ஆன் 23:15,16)*

ரஸூல் ﷺ அவர்கள் மொழிந்தார்கள்:

أَنَا سَيِّدُ وَلَدِ آدَمَ يَوْمَ الْقِيَامَةِ، وَأَوَّلُ مَنْ يَنْشَقُّ عَنْهُ الْقَبْرُ، وَأَوَّلُ شَافِعٍ وَأَوَّلُ مُشَفَّعٍ

ஆதமுடைய பிள்ளைகளுக்கு மறுமைநாளில் நான்தான் தலைவன். நான்தான் முதன்முதலாக அடக்கத்தலம் திறக்கப்பட்டு எழும்புபவன். நானே முதலாவதாக (மற்றவர்களுக்காகப்) பரிந்து பேசுபவன். என்னுடைய பரிந்து பேசுதலே முதலாவதாக ஏற்கப்படும். (அறிவிப்பு: அபூ ஹுரைரா ؓ, முஸ்லிம் 2278)

3

மிஅராஜ் பெயரிலான சடங்குகள்

அல்லாஹ்வுக்கே எல்லாப் புகழும். ஸலவாத்தும் ஸலாமும் அல்லாஹ்வின் தூதர் ﷺ அவர்கள்மீதும் அன்னாரின் குடும்பத்தார், தோழர்கள்மீதும் உண்டாவதாக.

மிஅராஜ் அல்லாஹ்வின் பேரற்புதங்களில் ஒன்று என்பதிலும் அதைச் செயல்படுத்தியது உண்மை என்பதிலும் நபி ﷺ அவர்கள் அல்லாஹ்விடத்தில் உயரிய அந்தஸ்தையுடையவர்கள் என்பதிலும் எவ்விதச் சந்தேகமுமில்லை. அது அல்லாஹ்வின் பகிரங்கமான சக்திகளில் ஒன்றாகும். எல்லாப் படைப்பினங்களிலும் தானே உயர்ந்தவன் என அல்லாஹ் இதன் மூலம் நிரூபித்துள்ளான்.

سُبْحَانَ الَّذِي أَسْرَى بِعَبْدِهِ لَيْلًا مِنَ الْمَسْجِدِ الْحَرَامِ إِلَى الْمَسْجِدِ الْأَقْصَى الَّذِي بَارَكْنَا حَوْلَهُ لِنُرِيَهُ مِنْ آيَاتِنَا إِنَّهُ هُوَ السَّمِيعُ الْبَصِيرُ

(அல்லாஹ்) மிகப் பரிசுத்தமானவன்; அவன் (முஹம்மது ﷺ என்னும்) தன் அடியாரை(க் கஅபாவாகிய) சிறப்புற்ற மஸ்ஜிதில் இருந்து (வெகு தூரத்திலுள்ள பைத்துல் முகத்தசின்) மஸ்ஜிதுல் அக்ஸாவிற்கு ஒரே இரவில் அழைத்துச் சென்றான். (அவ்வாறு அழைத்துச் சென்ற) நாம் அதனைச் சூழ்ந்துள்ள பகுதிகளைச் சிறப்புற்று ஓங்க அருள்வளம் அடையச் செய்திருக்கிறோம். நம்முடைய சான்றுகளை அவருக்குக் காட்டுவதற்காகவே (அங்கு அழைத்துச் சென்றோம்.) நிச்சயமாக (உம்முடைய இறைவன்) செவியுறுபவனாகவும், உற்று நோக்கியவனாகவும் இருக்கின்றான் (17:1) என அல்லாஹ் கூறியுள்ளான்.

நபி ﷺ அவர்கள் வானங்களுக்கு உயர்த்தப்பட்டு ஏழாம் வானத்தையும் கடந்து அல்லாஹ்விடம் உரையாடியதாகவும், ஐவேளைத் தொழுகை கடமையாக்கப்பட்டதாகவும், இது ஐம்பதாக இருந்து மீண்டும் மீண்டும் கேட்டுக்கொண்டதன் மூலம் அல்லாஹ் ஐந்தாக மாற்றியுள்ளான் என்பதையும், கடமை ஐவேளையாயினும் ஒரு நன்மைக்கு அது போன்ற பத்துமடங்கு நன்மை உண்டு என்ற வாக்குப்படி அதற்குரிய கூலி ஐம்பதாகும் எனவும் நபி

4

பராஅத் பெயரிலான சடங்குகள்

நமக்கு மார்க்கத்தைப் பூரணமாக்கி அருட்கொடைகளைப் பூர்த்தி செய்த அல்லாஹ்வுக்கே எல்லாப் புகழும். ஸலவாத்தும் ஸலாமும் அவனது தீர்க்கதரிசியும் தூதருமான முஹம்மது ﷺ அவர்கள்மீது உண்டாவதாக. அல்லாஹ் கூறுகிறான்:

الْيَوْمَ أَكْمَلْتُ لَكُمْ دِينَكُمْ وَأَتْمَمْتُ عَلَيْكُمْ نِعْمَتِي وَرَضِيتُ لَكُمُ الْإِسْلَامَ دِينًا

இன்று நான் உங்களுக்காக உங்கள் மார்க்கத்தை முழுமையாக்கி வைத்து, என்னுடைய அருளையும் உங்கள் மீது முழுமையாக்கி வைத்துவிட்டேன். உங்களுடைய இந்த இஸ்லாம் மார்க்கத்தைப் பற்றியும் நான் திருப்தியடைந்துவிட்டேன். (குர்ஆன் 5:3)

أَمْ لَهُمْ شُرَكَاءُ شَرَعُوا لَهُمْ مِنَ الدِّينِ مَا لَمْ يَأْذَنْ بِهِ اللَّهُ وَلَوْلَا كَلِمَةُ الْفَصْلِ لَقُضِيَ بَيْنَهُمْ وَإِنَّ الظَّالِمِينَ لَهُمْ عَذَابٌ أَلِيمٌ

அல்லாஹ் அனுமதிக்காத எதனையும் அவர்களுக்கு மார்க்கமாக்கி வைக்கக்கூடிய தெய்வங்களும் அவர்களுக்கு இருக்கின்றனவா? (ஒவ்வொரு செயலுக்கும் தக்க) கூலி கொடுப்பது மறுமையில் தான் என்று இறைவனுடைய தீர்மானம் ஏற்பட்டிருக்காவிட்டால், (எப்போதோ) அவர்களுடைய விவகாரம் முடிந்து போயிருக்கும். நிச்சயமாக (இத்தகைய) அநியாயக்காரர்களுக்கு மிக்க துன்புறுத்தும் வேதனை உண்டு. (குர்ஆன் 42:21)

அன்னை ஆயிஷா ﷺ அவர்கள் அறிவிக்கிறார்கள். ஒரு வெள்ளிக் கிழமை சொற்பொழிவின்போது அல்லாஹ்வின் தூதர் ﷺ அவர்கள் கூறினார்கள்:

فَإِنَّ خَيْرَ الْحَدِيثِ كِتَابُ اللَّهِ، وَخَيْرُ الْهُدَى هُدَى مُحَمَّدٍ صَلَّى اللَّهُ عَلَيْهِ وآله وَسَلَّمَ وَشَرُّ الأُمُورِ مُحْدَثَاتُهَا وَكُلُّ بِدْعَةٍ ضَلالَةٌ

செய்திகளில் மிக மேலானது அல்லாஹ்வின் வேதமாகும். நேர்வழியில் மேலானது முஹம்மதின் நேர்வழியாகும். செயல்

5

கனவின் பெயரில் ஈமானைப் பறிக்கும் குழப்பங்கள்

❀

இதை வாசிக்கின்ற முஸ்லிம்களுக்கு அல்லாஹ் அவர்களை இஸ்லாமிய வழியைக்கொண்டு பாதுகாப்பானாக. மடமையிலிருந்தும் வீண் கதைகளிலிருந்தும் பாதுகாப்பானாக. அப்துல் அஸீஸ் இப்னு அப்துல்லாஹ் இப்னு பாஸ் அவர்களுடைய அஸ்ஸலாமு அலைக்கும் வரஹ்மத்துல்லாஹி வபரகாதுஹு.

மஸ்ஜிதுந்நபவீயின் ஊழியன் ஷெய்க் அஹ்மதின் (மதீனா முனவ்வராவிலிருந்து மஸ்ஜிதுந்நபவீயின் ஊழியனுடைய உபதேசம்) என்ற துண்டுப் பிரசுரம் ஒன்றைக் கண்டேன். அதில் கூறப்பட்டிருப்பதாவது:

‘ஒரு நாள் வெள்ளிக்கிழமை இரவு குர்ஆனை ஓதிவிட்டு அதன் பின் அஸ்மாஉல் ஹுஸ்னாவையும் ஓதிவிட்டுத் தூங்குவதற்கு ஆயத்தமானேன். குர்ஆனையும் நல்ல மார்க்கத்தையும் நமக்கு எடுத்துக்கூறிய ரஸூல் ﷺ அவர்களைக் கண்டேன். ஷெய்க் அஹ்மதே! என நபியவர்கள் என்னை அழைத்தார்கள். அல்லாஹ்வின் தூதரே! இதோ உங்கள் கட்டளைக்கு அடிபணிகிறேன் எனக் கூறினேன். அப்போது நபியவர்கள் மனிதர்களின் (கெட்ட) செயல்களினால் நான் வெட்கமடைகிறேன். அல்லாஹ்வையும் மலக்குகளையும் எதிர்நோக்க முடியாதவனாக இருக்கிறேன். ஏனெனில், ஒரு வெள்ளிக்கிழமையிலிருந்து மறு வெள்ளிக்கிழமை வரை ஒரு இலட்சத்து அறுபதாயிரம் (முஸ்லிம்கள்) இஸ்லாமல்லாத நிலையில் இறந்துள்ளார்கள். இதற்கான காரணங்களையும் பாவச் செயல்களையும் நபியவர்கள் கூறிவிட்டு, ஷெய்க் அஹ்மதே! இந்த இறுதி உபதேசத்தை மக்களுக்கு எடுத்துக் கூறுவீராக. ஏனெனில், அது லவ்ஹுல் மஹ்பூலிருந்து சக்தியுள்ள பேனாவினால் எழுதப்பட்டதாகும். இதை யாராவது எழுதி ஓர் ஊரிலிருந்து வேறொரு ஊருக்கு அனுப்புவானேயானால்

6

நபி ﷺ அவர்களிடம் உதவிக்கரம் வேண்டுதல்

❀

கேள்வி: சில கூட்டங்கள் 'மதத் யாரஸூலல்லாஹ்!' (அல்லாஹ்வின் ரஸூலே, உதவுவீராக) அல்லது 'மதத் யா நபிய்யல்லாஹ்!' (அல்லாஹ்வின் நபியே, உதவுவீராக) என்று அழைத்துப் பிரார்த் திப்பதை நாங்கள் கேள்வியுறுகிறோம். இதன் மார்க்கத் தீர்ப்பு யாது?

பதில்: இந்த வார்த்தை பெரும் இணைவைப்பில் உள்ளதாகும். நபி ﷺ அவர்களிடமிருந்து உதவி வேண்டுதல்தான் இதன் பொருளாகும். இது இணைவைப்பு என்பதை நபி ﷺ அவர்களின் தோழர்கள், அவர்களைப் பின்தொடர்ந்தவர்களான ஹதீஸ் வல்லுனர்கள் எல்லோரும் ஏகோபித்துக் கூறியுள்ளார்கள். மரணித்தவர்களான நபிமார்கள் மற்றும் ஏனையோர், மறைவாக உள்ள மலக்குகள், ஜின்கள் மற்றும் ஏனையோரிடமிருந்து உதவிக் கரம் வேண்டுவது, சிலைகள், கற்கள், மரங்கள் அல்லது நட்சத்திரங்கள் அது போன்ற வற்றைக் கொண்டு உதவிக்கு அழைப்பது பெரும் இணைவைப் பதாகும். அல்லாஹ் கூறுகிறான்:

وَأَنَّ الْمَسَاجِدَ لِلَّهِ فَلَا تَدْعُوا مَعَ اللَّهِ أَحَدًا

'நிச்சயமாக மஸ்ஜிதுகள் அல்லாஹ்வுக்கே இருக்கின்றன. எனவே, அவற்றில் அல்லாஹ்வுடன் சேர்த்து வேறு எவரையும் நீங்கள் பிரார்த்திக்காதீர்கள்.' (குர்ஆன் 72:18)

மற்றோர் இடத்தில் கூறுகிறான்:

ذَٰلِكُمُ اللَّهُ رَبُّكُمْ لَهُ الْمُلْكُ وَالَّذِينَ تَدْعُونَ مِنْ دُونِهِ مَا يَمْلِكُونَ مِنْ قِطْمِيرٍ إِنْ تَدْعُوهُمْ لَا يَسْمَعُوا دُعَاءَكُمْ وَلَوْ سَمِعُوا مَا اسْتَجَابُوا لَكُمْ وَيَوْمَ الْقِيَامَةِ يَكْفُرُونَ بِشِرْكِكُمْ وَلَا يُنَبِّئُكَ مِثْلُ خَبِيرٍ

'அவனே உங்களுடைய இறைவனாகிய அல்லாஹ் அரசாட்சி யெல்லாம் அவனுக்குரியதே, அவனை அன்றி நீங்கள் எவர் களைப் பிரார்த்தித்து அழைக்கின்றீர்களோ, அவர்களுக்கு அணு